# அராஜகத்தின் ஆணிவேரை

## அறுப்போம்



கடிதத்தைப் போட்டுவிட்டு
தபால்காரரைப் பார்த்திருந்த
உன் தங்கைகூட்டு
முகவரி தெரியாத இடத்தில்
உன்னைத் தேடுகின்றோம் என்று சொல்ல
யார் நினைத்தார்கள்?
நண்பா விஜி
யார் நினைத்தார்கள்?
சத்தியமாய் கூறுகின்றோம்
விஜி
இது
சத்தியப் போராட்டமே.

நண்பா விஜி,
யார் நினைத்தார்கள்
வளர்த்த கடாக்களே
மார்பில் பாயு மென்று?
நாம்
சுவாசிக்கும் காற்றே
எங்களை
சுட்டெரிக்க முயலுதே

எம்
இரத்தத்தின் ஒவ்வோர்
அணுவும் சந்திக்கும் போதும்
உன் உறுதியைப் பற்றியே
பேசிக்கொள்கின்றன
நண்பா!

நாம் விடும் கண்ணீர்த் துளிகள்
இந்த மண்ணிற் பட்டு
இன்று
மறைந்து போகலாம்!
நாளை
அந்த மண்ணில் இருந்து
எழப் போவது
நாணல்கள் அல்ல, விஜி
அவை
நெருஞ்சி முட்கள்
அந்த முட்கள்
அராஜகத்தின்
பாதங்கள் படும் வரை
காத்திருக்க மாட்டாது
மெல்ல, மெல்ல
அராஜகத்தின் பாசறையை நோக்கி,
அவை நகரும்.
அப்போது ....
அராஜகத்தின் ஆயுதங்கள்
அங்கே
தோல்வியுறும்

தமிழ் மண்ணெங்கும் எதிரியின் கொலைக் கரங்கள் நமது மக்களை தின்று கொண்டிருக்கிறது. கிழக்கிலே வன்னியிலே, எல்லைப்புறங்களிலே ...... தேசம் எரிந்துகொண்டிருக்கிறது. நமது தேசத்தின் மீதான ஸ்ரீ லங்கா இனவாத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளே தனித் தேசத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்தை இட்டுச் சென்றுவிட்டன. ஸ்ரீ லங்கா அரசின் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை முழு மக்களதும் ஏகோபித்த ஆதரவு மிக்க போராட்டமாக வளர்த்தெடுத்தவர்கள் என்ற வகையில் பல இயக்கங்கள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றிற்கு பிரதான பங்குகள் உண்டு. இதில் எமது கலைக்கூடமான யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பங்கையும் மக்கள் இலகுவில் மறந்துபோய்விட மாட்டார்கள். பத்து வருடங்களுக்கு முன்னர் 'தனிநாடா வேண்டாமா?' எனச் சர்ச்சைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் கூட பல இக்கட்டான நிலைகளையும் தாண்டி 'தனிநாடுதான் இறுதி!' என்ற உறுதிமிக்க முடிவை முதலில் வெளிப்படையாக முன்வைத்தது யாழ். பல்கலைக்கழகம் தான்! அதற்குப் பின்வந்த காலகட்டங்களிலும் கூட தமிழ்ப்பேசும் மக்களுடைய போராட்டம் வெறுமனே ஒரு குழுவினதோ அல்லது குழுக்களினதோ, அதிகாரக் கைப்பற்றலுக்கான போராட்டமாக மட்டும் இல்லாமல் உண்மையிலேயே முழு மக்களதும் சுதந்திரத்திற்கு ஒடுக்குமுறைக்கு எதிரானதுமான போராட்டம் தான் என்பதை, சர்வதேச உலகுக்கு வெளிப்படுத்தியதில் பெரும் பங்கு யாழ். பல்கலைக்கழகத்திற்கே உண்டு. பல எழுச்சிகள் பல வெகுஜனப் போராட்டங்கள் பல்கலைக்கழகத்தை மையமாக வைத்தே நடந்தது. இப்போராட்டங்களிலெல்லாம் முழு மாணவர்களும் உணர்வு பூர்வமாகப் பங்கெடுத்துக்கொண்டார்கள். மேலும் அந்த ஆரம்ப காலகட்டங்களில் தோன்றியிருந்த தேச விடுதலை இயக்கங்களில் கூட பல்வேறு விரிவுரையாளரும் மாணவர்களும் ஊழியர்களாகினர்.

இது மட்டுமல்ல இதற்குப் பின்வந்த காலகட்டங்களில் கூட நியாயத்துக்கான அனைத்துப் போராட்டங்களிலும் பல்கலைக்கழகத்தின் பங்கை யாரும் மறந்துவிடக்கூடாது.

தமிழ்ப் பிரதேசங்களுக்கான அம்சம் மட்டுமல்ல; எல்லா நாடுகளிலும் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான ஒரேயொரு ஸ்தாபனமாக அமைவது பல்கலைக்கழகம் தான். எனவே தான் ஆளும் வர்க்கங்கள் பாசிச ஆட்சியையும், சர்வாதிகாரத்தையும் நிலைநாட்டத் தொடங்கும்போதே, பல்கலைக்கழகங்களிலிருந்து தான் பிரதானமாக தன் அழிப்பைத் தொடங்குகிறது. டாக்காவிலே, வியட்நாமிலே, ஈரானிலே என இதற்கான உதாரணங்கள், சான்றுகள் நீண்டு கிடக்கின்றன. தெஹ்ரானிலும், டாக்காவிலும் ஒரே இரவில் மட்டும் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் விடுதிகளிலும் பல்கலைக்கழக வளவுகளிலும் கொல்லப்பட்டனர். தெஹ்ரானில், ஷாவினுடைய ஆட்சியில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கொல்லப்பட்டபின்னும் கூட, ஜனநாயகத்திற்கான போராட்டங்களுக்கான மையமாக பல்கலைக்கழகமே அமைந்திருந்தது. கொமெய்னி, பல்கலைக்கழகத்தை மையப்படுத்தியே பல போராட்டங்களை நடாத்தினர்.

இப்படி ஜனநாயகத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும், ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், குரலெழுப்பக்கூடிய சக்தி வாய்ந்த ஓர் ஸ்தாபனத்திற்கே இந்த நிலை! மக்களின் விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடும் இயக்கங்களிடமிருந்தே இந்தப் பல்கலைக்கழகத்திற்கு அச்சுறுத்தல்கள்! கடத்தல், மிரட்டல், தாக்குதல் ...... இப்படி மாணவர் என்றுமில்லாதவாறு அச்சுறுத்தப்படுகின்றனர். மாணவரின் நியாயமான உரிமைக்காகக் குரல் கொடுத்தவர்கள் வெறித்தனமாகத் தாக்கப்படுகின்றார்கள். கடத்திச் செல்லப்பட்டு காணுமல் போய்விடுகிறார்கள்.

இந்த வகையிலேயே நமது மாணவன் விஜிதரனின் நிலையும். கடத்தப்பட்ட விஜிதரன், மாணவர்கள் ஒருமித்துக் குரலெழுப்பியும், போராட்டங்கள் நடத்தியும், விரிவுரையாளர்கள் உபவேந்தரின் வேண்டுகோள் விடுத்தும் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. அவன் எங்கிருக்கிறன்; எப்படியிருக்கிறன் என்ற விடயங்களை அறிய முடியவில்லை; இது மிகவும் கோரத்தனமான செயல். மனிதாபிமானம், மனிதநேயம், ஜனநாயகம், சுதந்திரம்... இந்த வார்த்தைகளெல்லாம் கற்பழிக்கப்பட்டு நடுத்தெருவில் நிறுத்தப்பட்டுவிட்டதா என மாணவர்கள் சிந்திக்கிறார்கள்!

சக மாணவன் விஜி மட்டுநகரையே சொந்த பிறப்பிடமாகக் கொண்டவன். தான் பிறந்த பிரதேசத்திலும், இங்கும் விடுதலைப் போராட்டத்திற்கு கணிசமான பங்களிப்புச் செய்தவன். இவன் கிழக்கில் கடந்த வருடம் இதே காலப்பகுதில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டவன்; அங்கு இனவாத அரசின் இரும்புச்சிறைக்குள் இருக்க விரும்பாமல் வடக்கு நோக்கி வந்த அவனுக்கு, சொந்த மண்ணிலேயே இந்தச்சிறை.

முன்பெல்லாம், இராணுவம் கைது செய்யும்போது பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்திற்கு அறிவித்த பின்பே கைது செய்யவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டனர். ஆனல் இன்று நம்மவர்கள் கைது செய்துள்ள போதோ, யார் கைது செய்தார்கள், எங்கே எப்போது என்ற விபரங்கள் தெரியாது! இது என்ன நிலைமை! அரசின் ஒடுக்குமுறைக்கெதிராகத் தீவிரமாகப் போராடிய பல்கலைக்கழகத்துக்கா இந்த நிலை?

சகமாணவன் விஜி விடுதலை செய்யப்படவேண்டும் என்று நாம் யாரைக் குறிப்பிட்டுக் கோஷம் எழுப்பப்போகிறோம்? தம்மையே இனங்காட்டமுடியாமல் கடத்திச் சென்ற கோழைத்தனத்தை எப்படி நோவது?

நம்மையும் நமது மக்களையும் நம்பி, தொலை தூரத்திலிருந்து கல்வி கற்க வந்த சகமாணவன் விஜிக்கும் எல்லோரையும் போலவே வாழ்வின் சுமைகள்! கடிதங்களைப் போட்டுவிட்டு, பதிலுக்காக தபால் காரரை பார்த்து நின்ற நான்கு தங்கைகள்! வயதான அம்மா, அப்பா! அந்தக்குடும்பத்து ஒரேயொரு ஆண்பிள்ளையைப் பார்த்து அவர்கள் கேட்கிறார்கள், 'எங்கட அண்ணா எங்க போட்டார்?' 'மகன் எங்க போட்டான்?' இதற்கு நாங்கள் என்ன சொல்லப் போகிறோம்? மக்களை இரட்சிக்க வந்ததாகக் கூறும் இயக்கங்கள் என்ன சொல்லப்போகின்றன?

நம்மைப் பொறுத்தவரையும் கூட விஜி ஒரு சகமாணவன் மட்டுமல்ல! ஒரு நேர்மையான போராளி யும்கூட. பல்கலைக்கழக மாணவரின் உரிமைக்காக இறுதிவரை தளராது நின்று குரல் கொடுத்த ஓர் உண்மைப் போராளியுமாவான்! ஆம்! கடந்த ஆகஸ்ட் மாதம் ஒரு மாணவிக்கு றாகிங் செய்தார்கள்" எனக்குற்றம் சாட்டப்பட்டு குறிப்பிட்ட ஒரு இயக்கத்தினால் மூன்று மாணவர்கள் தாக்கப்பட்டார்கள். [இவர்கள் தாக்கப்பட்ட பின்னர் குறிப்பிட்ட அந்த மாணவியின் பெற்றோர்கள் அப்படி றாகிங் எதுவும் நடைபெறவில்லை' என்பதை தமது மகளுடைய சம்மதத்துடன் நிர்வாகத்திற்குத் தெரிவித்திருந்தனர். என்பது குறிப்பிடத்தக்கது ] இந்தத் தாக்குதலைக் கண்டித்தும், இது சம்மந்தப்பட்ட அணுகுமுறைகளைக் கண்டித்தும் மாணவர்கள் நடாத்திய போராட்டங்கள் மக்களுக்குத் தெரியாதவையல்ல மாணவர்கள் கோரமாகத் தாக்கப்பட்ட இந்த சம்பவத்தைக் கண்டித்து ஆரம்பத்தில் மாணவர் மத்தியிலிருந்து எழுந்த தன்னிச்சையான போராட்டங்களை நெறிப்படுத்தி, அதிலுள்ள தவறுகளைக் களைந்து சரியான பாதைக்குக் கொண்டுசென்ற பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளின் குழுவான அமைப்புக் குழுவின் செயற்குழுவில் இவனும் ஓர் உறுப்பினனாவான். அன்று இவன் மாணவர்களின் ஏகோபித்த பிரதிநிதியாக மாணவர்களாலேயே தெரிவு செய்யப்பட்டான்: அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அவன், மாணவர்களின் போராட்டங்களை நியாயமாகவும் சரியாகவும் வழிநடத்திச் செல்வதில் பிரதான பங்கு வகித்தவன். மாணவரின் பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை இவ்வாறான போராட்டங்களூடாக நிர்வாகத்திடமிருந்து பெற்றுக் கொடுப்பதில் பிரதான பங்கு வகித்தவன்.

இந்த விஜிதரன் தான் காணாமல் போன விஜி!

இவ்வாறே இந்தப் போராட்டத்தில் முன்னின்று உழைத்த இன்னொரு மாணவனான கேசவன் அன்று கடத்தப் பட்டு தாக்கப்பட்டான். றாகிங் பிரச்சனையில் அடித்த குறிப்பிட்ட அதே இயக்கத்தால் ஆயுத முனையில் சாமவேளையில் சொந்த வீட்டிலிருந்தே கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டான்! நடுத்தெருவில் வீசப்பட்டு கொடூரமாகத் தாக்கப்பட்டான். மருத்துவ பீட இரண்டாம் வருட மாணவனான கேசவன் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டதற்கு அரசியல் காரணம் என்று நியாயம் கூறப்பட்டது. பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் பெரும்பாலான மாணவர்களுமே ஏதோ ஓர் அரசியலுடன் சம்மந்தப்பட்டுள்ளார்கள். வரவேற் கத்தக்க இந்த விடயத்திற்காக மாணவர்கள் தாக்கப்படுவார்களாயின் கிட்டத்தட்ட எல்லா மாணவர் களுமே தாக்கப்பட்டாக வேண்டியிருக்கும்.

கேசவன் தாக்கப்பட்ட விடயத்திற்கு பின் நடந்த சம்பவம்தான் விஜிதரன் கடத்தப்பட்ட விடயம்.

விஜிதரன் கடத்தப்பட்ட விடயத்திற்கு எதிராக இன்று எல்லாமாணவர்களுமே போரடத்துணிந்து விட் டார்கள். ஆம்! நாங்கள் ஜனநாயகத்தினதும் சுதந்திரத்தினதும் தேவையை உணரத் தொடங்கி விட் டோம். ஓர் ஊர்வலத்திலும்,இரண்டு மறியல் போராட்டங்களிலும் மாணவர்கள் உணர்வு பூர்வமாகப்பங்கு கொண்டுள்ளனர் இன்றைக்கு சாகும்வரைக்கும் உண்ணாமல் இருக்க பலமாணவர்கள் துணிந்து களத்தில் குதித் துவிட்டார்கள்ஆம் மாணவர்கள் தமது உரிமைகட்காக மரணத்தையும் சந்திக்க துணிந்துவிட்டார்கள்!

சிலர் மத்தியில் இது பிழையான போராட்டமென்றும் அற்பவிடயத்தைப் பெரிது படுத்துகிறோம் என் றும் கதைகள் பரப்பப்படுகின்றன. உண்மையிலேயே இப்போராட்டத்தின் அவசியத்தையும் தேவையை யும் புரிந்துகொண்டு செயற்படுபவர்கள் மத்தியில் இந்தக் கதைகள் பெரிதாக எதையும் செய்து முடித்து விடாது என்பது உண்மை. பிற்போக்கான முதலாளித்துவச் சட்டதிட்டங்களில் கூட, பல்கலைக்கழகங் களுள்இராணுவமோ, பொலிசோ நிர்வாகத்தின் அனுமதியின்றித் தலையிட அனுமதி கிடையாது.

மேலும் பல்கலைக் கழகங்களில்தான் பல்வேறு ஜனநாயகத்திற்கான போராட்டங்கள் ஊற்றெடுக்கின் றன என்பதே உலக அனுபவம் மட்டுமல்ல நமது அனுபவமும் உணர்த்துகின்ற ஓர் உண்மையாகும். அந்த வகையில், இதுவரை ஜனநாயகத்துக்கான போரட்டத்தின் ஒரு களமாக விளங்கிய யாழ் பல் கலைக் கழகமே இன்று அச்சுறுத்தப்படுகிறது. உண்மையில் நாம் இந்தப் போராட்டத்தில் வெற்றி பெறாமல் விடுவோமாயின் மக்களின் உரிமைக்கான எந்தப் போராட்டத்திலும் இனி வெற்றிபெற முடியாது. மாண வர் கற்கும்போது, பிடரிக்குப் பின்னால் குண்டுகள் நிரம்பிய துப்பாக்கி ஏந்திய கரங்களுக்குப் பயந்தவாறே படிக்கவேண்டும். இன்றைக்கு ஒரு விஜிதரனைப்போல நாளை பல 'விஜிதரன்களை' நாங்கள் காணாமல் தேடவேண்டியேற்படும். பலர் கண்முன்னாலேயே இல்லாமல் போகவேண்டியேற்படும்! மாணவர்கள் நிர்வா கத்தின் கட்டுப்பாட்டுக்குள், நியாயத்தின் கட்டுக்கோப்புக்குள் சுதந்திரமாகப் படிக்க விரும்புகிறார்கள். துப்பாக்கி முனையில் அல்ல.

இதைத்தவிர இந்தப் போராட்டமானது நடைபெறும் விடுதலைப் போராட்டத்திற்குப் பாதகமானது என்று கூறுவது தவறானது! வியர்சிப்பதும், விமர்சிக்கும் சுதந்திரத்திற்காகப் போராடுவதும், மக்களை மறக்காமல் போராடவேண்டும் என்பதை உணர்த்துவதும், எவ்வாறு தவறானதாகும்? மாறாக தேசிய விடுதலைப் போராட்டத்தையும், தேசிய விடுதலை. இயக்கங்களையும் சரியானபாதையில், கொண்டு செல்லும் என்பதே உண்மை. நிகழ்கால நியாயங்கள் எதிர்காலத்தின் குரல்வளையில் கத்திவைத்து மிரட்டுவதை எப்படி நாம் அனுமதிக்கமுடியும்?

இராணுவத்தின் அதிகாரத்திற்கு எதிராக நமது கடந்தகாலப் போராட்டங்களிலிருந்து இதை எவ்வாறு வேறு பிரித்துப் பார்க்கமுடியும்? எமது போராட்டம் எதேச்சதிகாரத்திற்கு எதிரானதே!

புதிய எஜமானர்களுக்காய் தெருக்களில் மரணிப்பதை நாங்கள் வெறுக்கிறோம். சுதந்திரத்திற்காகப் போராடி சுதந்திரம் மறுக்கப்பட்ட மனிதர்களாக வாழ்வதை நாங்கள் வெறுக்கிறோம்.

விஜிதானுக்காக ஒருவர் பின்னால் ஒருவராக மரணித்து ஜனநாயகத்துக்கான ஒரு வரலாற்றையே எழுதுவதற்கு இன்று மாணவர்கள் தயாராகிவிட்டார்கள்! இது உரிமை மறுக்கப்பட்ட, மறுக்கப்படப் போகும் ஒவ்வொரு மனிதனதும் வாழ்க்கையை உத்தரவாதப்படுத்தட்டும்!

ஜனநாயகத்தை நிறுவட்டும்!
அராஜகம் ஒழியட்டும்!

14-11-86.

மாணவர் அமைப்புக்குழு
யாழ். பல்கலைக்கழகம்